# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (திருத்தச்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2007, யூலை மாதம் 20 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2007 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (திருத்தச்) சட்டம்**

[2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 13/2007

**2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம், 2007 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்.

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்னும் சட்டத்தின் 6 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட் பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(ஈஈ) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதற் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிச் சபையின் பணிப்பாளர் தலைமையதிபதி ;".

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "மூன்று உறுப்பினர்களாதல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்து உறுப்பினர்களாதல்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(ஈஈ) காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்தும் எவரேனும் ஆளினால் பயனுறுத்தப்பட்ட அல்லது வழங்கப்பட்ட காப்புறுதி ஒப்பந்தத்திலிருந்து அல்லது பத்திரத்தி

லுமிருந்து எழுகின்ற ஏதேனும் பொறுப்புடைமையின் மீள் காப்புறுதியை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும் ;

(ஈஈஈ) சபையால் பயனுறுத்தப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் காப்புறுதி ஒப்பந்தத்தில் அல்லது பத்திரத் திலிருந்து எழுகின்ற ஏதேனும் பொறுப்புடைமையை இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் காப்புறுதியாளருடன் மீள் காப்புறுதிசெய்ய லாம் ;".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*